Innovation, Science and
Economic Development Canada
Office of the Superintendent
of Bankruptcy Canada

Innovation, Sciences et
Développement économique Canada
Bureau du surintendant
des faillites Canada

# கடன்பட்டிருக்கின்றீர்களா?

## புதியவொரு பயணத்தைத் தொடங்க வேண்டுமா?

### கடன்படும் தரப்புக்கான திவால்நிலை (Bankruptcy) செயல்முறை பற்றிய தகவல்கள்



Canada

© ரைட் கனடா மாண்புமிகு மகாராணி
கைத்தொழில் அமைச்சினால் பிரதிநிதிப்படுத்தப்படும் - 2018
Cat. No. Iu76-9/2018Ta-PDF
ISBN 978-0-660-24128-9

Also available in English under the title *Consumed by debt? Considering a fresh start? Information for consumers on the insolvency process.*
Aussi offert en français sous le titre *Croulez-vous sous les dettes? Songez-vous à repartir à neuf? Information sur la procédure d'insolvabilité à l'intention des consommateurs.*



# தனிப்பட்டவொரு நிதிப் பிரச்சினை இருக்கின்றதா?

எம்மில் சிலர் எமது வாழ்நாளில் தனிப்பட்டவொரு நிதிப் பிரச்சினையை எதிர்நோக்க நேரிடலாம். சில நிதிப் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ளலாம். ஆயினும், ஏனைய நேரங்களில் எமக்கு தொழில்முறை உதவி தேவை. இது காலப்போக்கில் மேலும் உக்கிரமடைந்து ஒரு கடும் பிரச்சினையாக மாறக்கூடும் அல்லது தொழில் இழப்பு, கடுமையான நோய், திருமண முறிவு அல்லது ஏனைய பெரும் வாழ்க்கைப் பிரச்சினை ஆகியவற்றின் காரணமாக திடீரென நிகழ்ந்திருக்கக்கூடும்.

காரணம் எதுவாக இருந்தாலும், உங்களின் தனிப்பட்ட செலவுகளை அல்லது கடன்களைத் தீர்க்க முடியாது என்றிருந்தால், உங்களுக்கான தீர்வுத்தெரிவுகள் இருக்கின்றன.

## ஆபத்தான அம்சங்களை அறிந்துகொள்ளுங்கள்

உங்களுக்கு கடன் தொல்லை இருந்தால், அல்லது பின்வருவனவற்றில் ஏதாவதொன்றை நீங்கள் தொடர இருந்தால்

- நீங்கள் தொடர்ச்சியாக உங்களது செலவு வரையறையை மீறி செலவு செய்கின்றீர்கள் அல்லது வசதிக்காக அன்றி அத்தியாவசியத் தேவைக்காக உங்களுடைய கடன் அட்டைகளைப் பாவிக்கின்றீர்கள்,
- நீங்கள் ஒரு சம்பள நாளிலிருந்து அடுத்த சம்பள நாளுக்கு கொடுப்பதற்கு உடன்பட்டு எப்பொழுதும் பணத்தை கடனாக வாங்குகின்றீர்கள்,
- நீங்கள் மாதாந்தம் வட்டியை அல்லது சேவைக் கட்டணத்தை மாத்திரம்தான் செலுத்துகின்றீர்கள் ஆனால் பல மாதங்களாக உங்களின் மொத்தக் கடனைக் குறைத்துக்கொள்வதில்லை,
- கடனைக் கொடுக்குமாறு நெருக்கடி செய்யப்படுகின்றீர்கள், ஊதியத்தை பிடித்துக்கொள்வதற்கு நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டுள்ளதாக, வழக்குத் தொடர்வதாக அல்லது உங்களது கார் வண்டி, தளபாடங்கள் அல்லது தொலைக்காட்சிப் பெட்டி என்பன மீளப்பெறப்படும் என அச்சுறுத்தப்படுகின்றீர்கள் அல்லது நீங்கள் கடன்களைத் தீர்ப்பதற்கு நிதி வசூலிக்கும் ஒரு முகவர்நிலையத்தை நாடுகின்றீர்கள்,
- உங்களுடைய கட்டணம் செலுத்தப்படாதுள்ளது என்ற காரணத்தால் கடன் வழங்கிய நிறுவனங்கள் கடன் சேவையை நிறுத்தப் போகுகின்றன

என்றிருந்தால்:

# உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்துடன் தொடர்புகொள்ளுங்கள்

## உங்களுடைய எல்லாத் தெரிவுகளுக்கும் செல்ல உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்திற்குச் சென்று சந்தியுங்கள்

நீங்கள் கடும் நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றீர்கள் என்றால், உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்தை (LIT) சந்திக்க வேண்டும். நீங்கள் ஒரு LIT நிலையத்தைச் சென்று பார்க்கும் போது, கடன் அட்டை பற்றிய கூற்றுக்கள், வங்கிக் கூற்றுக்கள், அடைமானப் பதிவுகள், கடன் ஆவணங்கள் முதலிய உங்களது நிதி நிலை பற்றிய சகல தகவல்களுடனும் செல்லுங்கள். ஒரு LIT நிலையம் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பல வகையான தெரிவுகளின் நன்மைகளையும் விளைவுகளையும் பற்றி விளக்கமளிக்கும். உதாரணமாக, LIT நிலையங்கள் இந்த முதல் சந்திப்புக்கு கட்டணத்தை அறிவிடமாட்டாது.

LIT நிலையம் உங்களுக்கு கடனை வழங்கியவர்களுக்கும் உங்களுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும். இது நீதிமன்றத்தின் ஒரு உத்தியோகபூர்வத் தரப்பாக விளங்கும். உங்களுக்கு உதவுவது, உங்களுடைய நிலையை மதிப்பிடுவது தவிர, LIT நிலையம் கடன் திட்டத்தையும் மற்றும் திவால்நிலை செயல்முறையையும் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும். இந்த நிலையம் உங்களின் உரிமைகள் மற்றும் கடன் வழங்கியவர்கள் மதிக்கப்படுதல் ஆகிய அம்சங்களுக்கு உத்தரவாதமளிப்பதில் இன்றியமையாதவொரு பங்கை வகிக்கும்.

**உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையம் என்றால் என்ன?**

உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையம் (LIT) என்பது ஒரு கடன் திட்டம் அல்லது ஒரு திவால்நிலை போன்ற உங்களுடைய கடன் பொறுப்புக்களிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவதற்கு அனுமதிக்கும் அரசாங்கம் நெறிப்படுத்திய திவால்நிலை நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு தொழில் சார்ந்த நிறுவனமாகும்.

நீங்கள் ஒரு LIT நிலையத்தைத் தேர்ந்தெடுக்கும் போது, திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்திலிருந்து ஒரு உரிமம் வழங்கப்பட வேண்டிய அறிவும், அனுபவமும், திறன்களும் வாய்ந்த செய்து நிரூபித்துள்ள ஒரு தரப்புடன் இணைந்து கையாளுகின்றோம் என்ற எண்ணமும் நம்பிக்கையும் உங்களிடம் ஏற்படலாம்.

ஒரு LIT நிலையம்:

- நிதி சார்ந்த கஷ்டங்களையுடைய வாடிக்கையாளர்களின் விவகாரங்களை நன்கு ஆராய்ந்து முழுமையான தெரிவுகளை வழங்கும்.
- கடன் வழங்கியவர்களுடன் உங்கள் சார்பாக விடயங்களை கையாளும்.
- துஷ்பிரயோகத்திலிருந்து கடன்பட்டோரின் உரிமைகளை பாதுகாக்கும்.

## உங்களுடைய பகுதியில் உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்தைத் தேடிக்கண்டுகொள்வதற்கு:

- Canada.ca website இணையத்தளத்தில் கிடைக்கக்கூடிய உரிமம் பெற்ற திவால்நிலை அறங்காவலர் நிலையத் தரவுத்தளத்தில் தேடவும்.

**ஒரு கடன் ஆலோசகர் என்பவர் யார்?**

கடன் ஆலோசகர்கள் பொதுவாக ஒரு கடன் திட்டத்தை அல்லது திவால்நிலையை கோப்பு செய்ய முன்னரும், கோப்பு செய்யும் போதும், அதன் பின்னரும் கடன் வாடிக்கையாளர்களுக்கு கடன் தொடர்பான சேவைகளை வழங்குவார்கள். மாறாக, இலாபத்தை எதிர்பாராத கடன் ஆலோசகர்கள் அநேகமாக நிதி ஆலோசனை தேவைப்படுபவர்களுக்கு கடன் ஆலோசனை தொடர்பான சேவைகளை வழங்குவார்கள்.

## உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்திற்கும் ஒரு கடன் ஆலோசனைத் தரப்புக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்

| | உரிமம் பெற்ற திவால்நிலை அறங்காவலர் நிலையம் | கடன் ஆலோசனைத் தரப்பு |
|---|---|---|
| முதல் ஆலோசனை இலவசம் | ✓ | ? |
| கடன் திட்டமொன்றைக் கோப்புசெய்யலாம் | ✓ | ✗ |
| திவால்நிலையொன்றைக் கோப்புசெய்யலாம் | ✓ | ✗ |
| மத்திய அரசாங்கத்தினால் உரிமம் அளிக்கப்படும் | ✓ | ✗ |
| மத்திய அரசாங்கத்தினால் நெறிப்படுத்தப்படும் | ✓ | ✗ |
| அனுபவமும் கல்வித் தகைமையும் அரசாங்கத்தினால் மதிப்பிடப்படும் | ✓ | ✗ |
| சட்டமுறையான கட்டணங்க்ள அறவிடப்படும் | ✓ | ✗ |
| முறைசார்ந்த புகார் பொறிமுறைத்திட்டம் காணப்படும் | ✓ | ? |
| கூட்டு நியமங்களுக்கு வழங்கப்படும் குறைந்த வீதத்திலான திவால்நிலை ஆலோசனை | ✓ | ✗ |

# கடன்படும் தரப்புத் திட்டத்தையும் திவால்நிலை செயல்முறையையும் புரிந்துகொள்ளுங்கள்

உங்களின் நிதிப் பிரச்சனைக்கு சாத்தியமான பல தெரிவுகள் இருக்கின்றன. இந்தப் பிரிவு திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்தினால் (தி.மே.அ.) மேற்பார்வை செய்யப்பட்ட இரண்டு முறைசார்ந்த தெரிவுகள் பற்றிய தகவல்களை வழங்கும். கனடாவின் திவால்நிலைச் சட்டத்தின் கீழ் சட்டமுறைப் பாதுகாப்பை அளிக்கின்ற கடன்படும் தரப்புத் திட்டமும் திவால்நிலையும் இந்த முறைசார்ந்த தெரிவுகளாகும். இந்த இரண்டு தெரிவுகளும் நேர்மையை அனுமதிக்கின்றன. ஆயினும் இவை துரதிர்ஷ்டவசமாக கடன்பட்ட தரப்புகளை கடன் பொறுப்புக்களிலிருந்து விடுதலை பெறச்செய்கின்றன.

## கடன்படும் தரப்புத் திட்டம்

உங்களுடைய மொத்தக் கடன்கள் $250,000 தொகைக்கு (உங்களது அடைமானம் நீங்கலாக) குறைவாக இருந்தால், ஒரு கடன்படும் தரப்புத் திட்டம் உங்களுக்கு சரியான தெரிவாக அமையலாம்.

ஒரு கடன்படும் தரப்புத் திட்டம் என்பது செலுத்தப்பட வேண்டிய உங்களின் கடன்களை அதாவது அந்தக் கடன்களின் ஒரு விகிதத்தை செலுத்துவதற்கான அல்லது உங்களுடைய அந்தக் கடன்களை செலுத்தித் தீர்ப்பதற்காக உங்களுக்கு இருக்கின்ற காலத்தை நீடிப்பதற்கு அல்லது அந்த இரண்டையும் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கான ஒரு திட்டமாகும்.

இந்தத் தெரிவைக் கொண்டு, நீங்கள் உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை நிலையத்திற்கு (LIT) கொடுப்பனவுகளை செலுத்தலாம் என்பதுடன் அப்போது இந்தப் பணம் உங்களுக்கு கடன் வழங்கிய தரப்புகளுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

ஒரு கடன்படும் தரப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு சட்டப்படி நீங்கள் ஐந்து வருடங்களுக்கு அதிகமான காலத்தை எடுக்க முடியாது.

## ஒரு கடன்படும் தரப்புத் திட்டத்தை ஏன் கோப்புசெய்ய வேண்டும்?

ஒரு கடன்படும் தரப்புத் திட்டம் உங்களை திவால் நிலைக்கு ஆளாக்காமல் உங்களின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவலாம். ஒரு திவால்நிலை போன்றல்லது, உங்களுக்கு கடனை வழங்கும் தரப்புகள் உங்களது கடன் திட்டத்தை ஏற்றுக்கொண்டால், அதேபோன்று நீங்கள் உங்களது கடன் திட்டத்திலுள்ள நியதிகளைப் பின்பற்றி நடந்தால், உங்களின் சொத்துக்களை (உ-ம்: ஏதாவது சேமிப்புகள் அல்லது முதலீடுகள், உங்களின் கார் வண்டி, உங்களின் வீடு முதலியன) நீங்கள் பாதுகாத்துக் கொள்ளலாம்.

## உங்களுக்கு கடன் வழங்குபவர்கள் கடன் திட்டத்தை கட்டாயம் அங்கீகரிக்க வேண்டும்

உங்களுடைய கடன் விண்ணப்பத்தை கோப்புசெய்கின்ற LIT நிலையம் உங்களுக்கு கடன் வழங்கும் தரப்புகளினால் அநேகமாக அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒரு கடன் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உங்களுடன் இணைந்து உதவும். உங்களது LIT நிலையம் அந்தக் கடன் திட்டத்தை தி.மே.அ. அலுவலகத்தில் கோப்புசெய்யும். LIT நிலையம் உங்களின் தனிப்பட்ட நிலை மற்றும் உங்களுடைய நிதிப் பிரச்சினைகளுக்கான காரணங்கள் என்பன அடங்கிய ஒரு அறிக்கையுடன் அந்தக் கடன் திட்டத்தின் ஒரு பிரதியை உங்களுக்கு கடன் வழங்கும் தரப்புகளுக்கு பெற்றுக்கொடுக்கும்.

உங்களின் கடன் திட்டத்தை ஏற்பதா அல்லது மறுப்பதா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு உங்களுக்கு கடன் வழங்கும் தரப்புகளுக்கு 45 நாட்கள் தேவைப்படும்.

## உங்களின் கடன்படும் தரப்புத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால்:

- நீங்கள் ஒரு தொகையான மொத்தப் பணத்தை அல்லது வழமையான தவணைக்கட்டணங்களை அந்தக் கடன் திட்டத்திலுள்ள ஏனைய நிபந்தனைகளுக்கு அமைய அந்த LIT நிலையத்திற்குச் செலுத்த வேண்டும்.
- நீங்கள் உங்களுக்கு வழங்கப்படும் கடன்களின் தவணைக்கட்டணங்களை செலுத்தி முடிக்கும் வரை கடன்களுக்கான உத்தரவாதமாக உங்களின் சொத்துக்களைப் பாரப்படுத்த வேண்டும்.
- நீங்கள் இரண்டு கட்டாய ஆலோசனை அமர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும்.
- அந்தக் கடன் திட்டத்தின் கால வரையறையும் மற்றுமொரு மூன்று வருடங்களும் அடங்கலாக அந்தக் கடன் திட்டம் உங்களின் கடன் பதிவின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

உங்களின் அந்தக் கடன் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், உங்களது LIT நிலையம் அந்தக் கடன் திட்டத்திற்கான மாற்றங்களை மேற்கொண்டு அதனை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு உதவலாம் அல்லது திவால்நிலை தொடர்பில் கோப்புசெய்வது அடங்கலாக உங்களது நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஏனைய தெரிவுகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

குறித்த கடன் திட்டம் தி.மே.அ. அலுவலகத்தில் கோப்புசெய்யப்பட்டவுடன், உங்களது உத்தரவாதமற்ற கடன்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதை நீங்கள் நிறுத்திக்கொள்ளலாம் என்பதுடன் உங்களுக்கு கடன் வழங்கும் தரப்புகள் ஒரு ஊதியக் கழிவு உத்தரவு செயல்முறையை பிரயோகித்து வருகின்றன அல்லது உங்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்துள்ளன என்றால், இந்த செயல் நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.

உங்களுடைய கடன் திட்டத்தின் கால முடிவில் அதாவது கடன் தவணைக்கட்டண நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் நீங்கள் பூர்த்திசெய்துள்ளீர்கள் எனும் பட்சத்தில், அந்தக் கடன் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடன் பொறுப்புக்களிலிருந்து நீங்கள் சட்டமுறையாக விடுவிக்கப்படுவீர்கள்.

## குறிப்பு:

உங்களுக்கு $250,000 தொகைக்கு அதிகமான பணம் தேவை என்றால், 'பிரிவு I' கடன் திட்டம் என்றழைக்கப்படும் வித்தியாசமான ஒரு கடன் திட்டத்தைக் கோப்புசெய்யும் தெரிவு உங்களுக்கு இருக்கின்றது. ஆனால், ஒரு கடன்படும் தரப்புத் திட்டத்தைப் போலல்லாது, ஒரு 'பிரிவு I' கடன் திட்டம் உங்களுக்கு கடன் வழுங்கும் தரப்புகளினால் ஏற்றுக்கொள்ளப்படா விட்டால், நீங்கள் தானாகவே திவால்நிலைக்கு ஆளாகுவீர்கள்.

## திவால்நிலை

திவால்நிலை என்பதும் சட்டமுறையான ஒரு செயல்முறையாகும். உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்தின் (LIT) உதவியினூடாக இந்த நிலையிலிருந்து மீண்டுகொள்ளலாம். வேறு எந்த வழியிலும் உங்களுடைய கடன் பிரச்சினைகளை உங்களால் தீர்க்க இயலாது மற்றும் உங்களுடைய நிதிப் பொறுப்புக்களிலிருந்து நீங்க முடியாது எனும் போது திவால்நிலைக்கு இறுதி நிவாரணமாக நீங்கள் கோப்புசெய்ய வேண்டும். திவால்நிலைக்காக கோப்புசெய்வதற்கும் அதே நேரம் அது உங்களுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை நிர்ணயிப்பதற்கும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமாகும்.

LIT நிலையம் தேவையான படிவங்களைப் பூரணப்படுத்த உங்களுக்கு உதவும். அந்தப் படிவங்கள் கோப்புசெய்யப்பட்ட பின்னர், தி.மே.அ. அலுவலகத்தில் அத்தகைய படிவங்களை உத்தியோகபூர்வமாக ஏற்கும் அலுவலர் பரிசீலித்து அந்தத் திவால்நிலையை ஏற்றுக்கொண்டுள்ளார் எனும் பட்சத்தில், நீங்கள் முறையாக திவாலானவர் எனப் பிரகடனப்படுத்தப்படுவீர்கள். அதிலிருந்து, LIT நிலையம் உங்களுக்கு கடன் வழங்கிய தரப்புகளுடன் நேரடியாக கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும். கடன் வழங்கும் தரப்புகளிலிருந்து அல்லது நிதி வசூலிக்கும் முகவர்நிலையங்களிலிருந்து கிடைக்கும் கடன்களும் நிறுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால், உங்களுடைய LIT நிலையத்துடன் கதைக்குமாறு பணியுங்கள். ஒரு LIT நிலையம் உங்களுடைய குறித்த விடயத்திற்குப் பொருத்தமான மேலதிக விபரங்களை உங்களுக்கு வழங்கலாம்.

உங்களின் திவால்நிலையை நீங்கள் வெளிப்படுத்தும் போது, திவால்நிலை செயல்முறையின் போதும் அதே நேரம் தேவையான அனைத்துத் தகவல்களை வழங்கும் போதும் அந்த LIT நிலையத்திற்கு ஒத்துழைக்க வேண்டும்.

நீங்கள் திவால்நிலைக்கு ஆளாகும் போது, LIT நிலையம் மாகாண அல்லது ஆள்புல சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டவைகள் மற்றும் வீட்டுப் பொருட்கள், துணிமணிகள் மற்றும் உங்களுடைய வர்த்தக சொத்துக்கள் ஆதனங்கள் போன்ற உங்களது சகல சொத்துக்களையும் எடுத்து தனது பொறுப்பில் வைத்துக்கொள்ளும்.

நீங்கள் அந்த LIT நிலையத்திற்கு பாரப்படுத்திய சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் பணம் உங்களுடைய திவால்நிலையுடன் சம்பந்தப்பட்ட உங்களது கடன்களையும், கட்டணங்களையும் செலுத்தித் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

**கட்டாய ஆலோசனை**

நீங்கள் திவால்நிலைக்காக கோப்புசெய்தால் அல்லது ஒரு கடன்படும் தரப்புத் திட்டத்தைக் கோப்புசெய்தால், உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்தினால் அல்லது தகுதி வாய்ந்த ஒரு ஆலோசகரினால் நடத்தப்படும் இரண்டு ஆலோசனை அமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவீர்கள். இந்த ஆலோசனை அமர்வுகள் உங்களின் எதிர்கால நிதிப் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உதவியாக அமையும்.

**கட்டணங்கள்**

ஒரு கடன் திட்டத்தைக் கோப்புசெய்வதற்கு அல்லது திவால்நிலைக்காகக் கோப்புசெய்வதற்கு, நீங்கள் கட்டணங்களை செலுத்த வேண்டும். கட்டணங்கள், விடயத்திற்கு விடயம் வேறுபடும் என்பதுடன் மத்திய அரசாங்கத்தினால் நெறிப்படுத்தவும்படும்.

# திவால்நிலையிலிருந்து விடுதலை பெறுவதைப் புரிந்துகொள்ளுங்கள்

ஒரு திவால்நிலையிலிருந்து விடுதலை பெறுவது என்பது ஒரு திவால்நிலையிலுள்ள இறுதிக் கட்டமாகும். திவால்நிலையிலிருந்து நீங்கள் விடுதலை பெற்ற பின்னர், நீங்கள் திவால்நிலைக்கு ஆளாகியிருந்த போது உங்களின் அநேகமான கடன்களை மீளச்செலுத்துவதற்குரிய சட்டமுறையான பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்படுவீர்கள். ஜீவனாம்சம், உதவிக் கொடுப்பனவுகள் அல்லது நீதிமன்றம் விதித்த தண்டப்பணங்கள், அபராதங்கள் அல்லது இழப்பீட்டு உத்தரவுகள் போன்ற ஒரு சில வகையான கடன் பொறுப்புக்களிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படமாட்டீர்கள்.

அத்தகையவொரு விடுதலையைப் பெறுவதற்கு, செயல்முறை முழுதிலும், உரிமம் பெற்ற திவால்நிலை அறங்காவல் நிலையத்துடனான (LIT) உங்களது ஒத்துழைப்பு மற்றும் உங்களுடைய நிலை என்பவற்றைப் பொறுத்து, ஒன்பது மாதங்கள் அல்லது அதற்கு அதிகமான காலங்கள் செல்லும்.

**நீங்கள் ஒரு கடன் திட்டத்தைக் கோப்புசெய்தால் அல்லது திவால்நிலையை வெளிப்படுத்தினால் உங்களின் கடன் வீதத்திற்கு என்ன நிகழும்?**

ஒரு திவால்நிலைக்காகக் கோப்புசெய்யப்படும் அல்லது ஒரு கடன் திட்டம் கோப்புசெய்யப்படும் போது கடன் வழங்கும் பணியகங்களுக்கு அது பற்றி அறிவிக்கப்படும். கடன் திட்டமானது அதன் கால வரையறையும் மற்றுமொரு மூன்று வருடங்களும் அடங்கலாக உங்களின் கடன் பதிவின் அடிப்படையில் அமைந்திருக்கும். நீங்கள் திவால்நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆறு அல்லது ஏழு வருடங்களின் பின்னர், நீங்கள் எந்த மாகாணத்தில் வசிக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்து, ஒரு முதலாவது திவால்நிலை பற்றிய தகவல்கள் உங்களுடைய கடன் அறிக்கையிலிருந்து வழமையாக பதிவழிக்கப்படும்.

**கடன் திட்டமும் திவால்நிலை அறிக்கைகளும் பொதுவாக இருக்கும்**

நீங்கள் ஒரு கடன் திட்டத்தைக் கோப்புசெய்யும் அல்லது திவால்நிலையை வெளிப்படுத்தும் போது, உங்களுடைய பெயர் பொதுவான திவால்நிலைப் பதிவுகளின் பாகமாக மாறும். தகவல்களுக்கான ஒரு கோரிக்கையை விடுக்கின்ற எவரேனுமொருவருக்கு இந்த அறிக்கைகளை பார்வையிடுவதற்கு முடியும்.

## திவால்நிலையிலிருந்து விடுதலை பெறுவது சில வேளைகளில் தானாக நிகழும்

நீங்கள் தானாகவே விடுதலை பெறுவதா அல்லது இல்லையா என்பது பல பல காரணிகளில் தங்கியிருக்கும்.

இது உங்களுடைய முதலாவது திவால்நிலை என்றால்:

1. உங்களின் விடுதலை LIT நிலையத்தினால், அல்லது கடன் வழங்கும் ஒரு தரப்பினால் அல்லது திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்தினால் (தி.மே.அ.) மறுக்கப்படவில்லை,

2. நீங்கள் ஆலோசனைகளைப் பெறுவதற்கு மறுக்கவில்லை அல்லது பாராதீனப்படுத்தவில்லை,

3. தி.மே.அ. மூலம் தாபிக்கப்பட்ட நியமத்தின் பிரகாரம் உங்களுடைய மிகை வருமானத்தின் ஒரு பாகத்தைச் செலுத்துவதற்கு நீங்கள் தேவைப்படுத்தப்படவில்லை, நீங்கள் மிகை வருமானம் தொடர்பில் உங்களது LIT நிலையத்திற்கு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டும் என்றவிடத்து, 21 மாதங்களுக்கு இந்த வருமானத்தின் பங்களிப்புப் பாகத்தின் பின்னர் தானாக விடுதலை பெறுவதற்கு தகுதியுடையவராக இருந்து, நீங்கள் தானாக ஒரு விடுதலையைப் பெறுவதற்கு தகுதியற்றவராக இருக்கும் பட்சத்தில், அத்தகைய ஒரு விடுதலைக்கான விசாரணைக்கு சமூகமளிக்கும்படி நீதிமன்றத்திற்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டால்

கோப்புசெய்து ஒன்பது மாதங்களின் பின்னர் நீங்கள் அந்தத் திவால்நிலையிலிருந்து தானாக விடுதலை பெறுவீர்கள்.

## திவால்நிலை சம்பந்தப்பட்ட நடுநிலைத்தீர்ப்பு

திவால்நிலையை வெளிப்படுத்தியுள்ள நபர் ஒருவருக்கும் மற்றும் மிகை வருமானக் கொடுப்பனவுகள் தொடர்பான அவரின் LIT நிலையத்திற்கும் இடையில் நிலவும் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளும் வகையில் உதவுவதற்கு திவால்நிலை சம்பந்தப்பட்ட நடுத்தீர்ப்புநிலை வாய்ப்பு இருக்கின்றது. ஒரு சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், கடன் வழங்கும் ஒரு தரப்பு, ஒரு விடுதலையை மறுதளித்தாலும் நடுத்தீர்ப்புநிலை வாய்ப்பு இருக்கும். மேலும் பல தகவல்களுக்கு தி.மே.அ. Canada.ca website என்ற இணையத்தளத்தில் பிரவேசிக்கவும்.

# திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகம் பற்றி

திவால்நிலைச் சட்டத்தை நிருவகிப்பதும், கம்பனிகள் கடன் ஒப்பந்தச் சட்டத்தின் ஒரு சில கடமைகளை நிறைவேற்றுவதும் திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்தின் (தி.மே.அ.) பொறுப்புப் பணியாகும். நாம் திவால்நிலைத் தொழிலுக்கு அனுமதி வழங்கி, அதனை நெறிப்படுத்தி, வினைத்திறனும் பயனுறுதி வாய்ந்ததுமான கட்டமைப்பை உறுதிசெய்து, திவால்நிலை செயல்முறைக்கு இணங்க பங்குதாரர்களை மேற்பார்வை செய்து, பொதுவான அறிக்கைகளையும் புள்ளிவிபரங்களையும் நாம் பேணி வருகின்றோம்.

## பிரச்சினைகளும் புகார்களும்

குறித்த கடன் திட்டங்கள், திவால்நிலை செயல்முறைகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் உங்களுக்கு ஏதாவது பிச்சினைகள் சந்தேகங்கள் இருக்குமாயின், உரிமம் பெற்ற ஒரு திவால்நிலை அறங்காவலர் நிலையத்துடன் கதைக்கவும் அல்லது தொலைபேசி மூலம் அல்லது Canada.ca website என்ற இணையத்தளத்தினூடாக திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்துடன் (தி.மே.அ.) தொடர்புகொள்ளவும்.

தகவல்களைப் பதிந்துகொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் LIT நிலையங்களுக்கு எதிரான புகார்கள், கடன்கள் மற்றும் பற்றுக்கள் என்பன தொடர்பாக விசாரணை செய்வதும் இந்த திவால்நிலை மேற்பார்வையாளர் அலுவலகத்தின் (தி.மே.அ.) பொறுப்பாகும். ஒரு புகாரைக் கோப்புசெய்வதற்கு, தொலைபேசி மூலம் அல்லது Canada.ca website.என்ற இணையத்தளத்தினூடாக தி.மே.அ. ஐ தொடர்புகொள்ளவும்.

**1-877-376-9902**
1-866-694-8389 (காதூ கேளோமகைக்கூ)
((மு.ப. 8:30 மணி முதல் பி.ப. 4:30 மணி வரை - திங்கள் முதல் வெள்ளி வரை)

உங்களின் பண விடயங்களுக்கூ **(Your Money Matters)** மூகநூல் டூவிட்டரில் (Facebook and Twitter) தறொடர்பில் இரூக்கவூம்

கடனை சமாளித்துக்கொள்வதற்கூ (Office of Consumer Affairs) அதிக வளங்களையூம் தகவல்களையூம் பறெ்றூக்கொள்ளலாம்